# THE EVELYN RUTNAM INSTITUTE FOR INTER - CULTURAL STUDIES

# ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனம்

# தமிழ் இலக்கிய அரங்கேற்ற மரபு

**கலாநிதி நா. சுப்பிரமணியன்**
முதுநிலை விரிவுரையாளர் தரம் I
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*பல்கலைக் கழக ஒழுங்கை,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*
09 - 05 - 1995

UNIVERSITY LANE,
THIRUNELVELY,
JAFFNA.

ஆய்வுக் கட்டுரைத் தலைப்பு: <u>தமிழில் இலக்கிய அரங்கேற்ற மரபு</u>

ஆய்வாளர்: கலாநிதி நா. சுப்பிரமணியம்
முதுநிலை விரிவுரையாளர் தரம் - 1
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்,
இலங்கை.

## தோற்றுவாய்:

கலை இலக்கியச் செயற்பாடுகளில் முக்கியமான இரு நிலைகள் உள. ஒன்று ஆக்கநிலை; மற்றது அவ்வாக்கத்தை மக்கள் முன் வைத்து அங்கீகாரம் கோரும் நிலை. முதலாவது நிலையிலே ஆக்குவோனின் - படைப்பாளியின் - புனைதிறன் சார்ந்த ஆளுமை தொழிற்படுகின்றது. இரண்டாவதிலே அவ்வாளுமைத் தொழிற்பாட்டின் பெறுபேறு சமூகத்தின் கவனத்துக்கு வருகின்றது. இவ்வாறு சமூகக் கவனம் பெறும் நிலையில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நிறுவன அமைப்புக்களுக்கு முன் அப்படைப்பாக்கம் அறிமுகமாகிறது. இவ்வாறான நிறுவன அமைப்புக்களை அரங்கு, அவை (சபை) கழகம், களம், சங்கம், மன்றம் முதலிய பெயர்களால் வழங்குவது மரபு. அறிஞர், கலைஞர், சுவைஞர், திறனாய்வாளர் ஆகிய பலவகையினரும் ஒருங்கிணைந்த சூழலாக இவை அமையும். இவ்வாறான நிறுவனத்தில் ஒருவர் தமது கலை இலக்கிய ஆக்கத்தினை முதலில் அறிமுகம் செய்து அங்கீகாரம் கோரும் நிலையே பொதுவாக 'அரங்கேற்றம்' என்ற தொடரால் சுட்டப்படுகின்றது. இன்று பொதுவாக இசை, நடனம் என்னும் வகைகள் சார்ந்த முதல் மேடை நிகழ்வுகளே 'அரங்கேற்றம்' என்ற தொடருக்கு உரிமை பூண்டுள்ளன. இயல் சார்ந்த - இலக்கியம் சார்பான- முதல் அறிமுகங்கள் பொதுவாக அறிமுகவிழா, வெளியீட்டு விழா ஆகிய தொடர்களாலேயே இன்று வழங்கப்பட்டு வருகின்றன. ஆயின் பண்டை நாளில் இவையும் 'அரங்கேற்றம்' என்ற பெயரால் வழங்கப்பட்டன என்பதற்குச் சான்றுகள் உள. 'கம்பராமாயண அரங்கேற்றம்', 'கந்தபுராண அரங்கேற்றம்' முதலியனவாக வழங்கப்பட்டுவரும் தொடர்கள் இவ்வகையிற் சுட்டிக் காட்டத்தக்கன. இவ்வாறான இலக்கிய அரங்கேற்ற மரபு தமிழிலக்கியப் பரப்பிலே பயின்றுவந்துள்ளன முறைமை பற்றிய ஒரு தேடலாக இந்த ஆய்வுரை அமைகின்றது.

## அரங்கேற்றம்; சொற்பொருள்நிலை

அரங்கேற்றம் என்ற தொடரின் அடிச்சொல் அரங்கம் அல்லது அரங்கு என்பதாகும். அரங்கம் என்பதற்கு

ஆற்றிடைக்குறை, கல்விச்சாலை, கூத்தப்பயிலிடம், சத்திரம்
சபை, சாலை, சிலம்பக்கூடம், சீரங்கம், சூதாடிடம்,
நடனம், நிறம், போர்க்களம், அந்தரங்கம்."

ஆகிய பொருண்மைகள் உள.[1] இவற்றுட் சபை என்ற பொருண்மையுடன் தொடர்புடையதாகவே 'அரங்கேற்றம்' என்ற தொடர் பயில்கின்றது. இத்தொடருக்கு,

சபையிலேற்றுதல், நூல் செய்தவர் முதன்முதல் அந்நூலைச் சங்கத்தில் வைத்துப் பிரசங்கித்தல், நடிகர் அரங்கேறுதல்

என்பனவாக மதுரைத் தமிழ்ப்பேரகராதி விளக்கம் தரும்.[2] தமிழ் லெக்சிகன் இத் தொடருக்கு,

Presentation of a new work for acceptance, before a learned assembly, first public performance of dancing girl or of a drama:

புதுநூல், நடனம் முதலியவற்றை முதன்முறை சபைக்கு ஏற்பிக்கை எனப்பொருள் கூறும்.[3]

இவ்விளக்கங்களை நோக்கும்போது 'அரங்கேற்றம்' என்பது கலை இலக்கியம் சார்ந்த செயற்பாடுகளின் முதலாவது சபை நிகழ்ச்சி என்பதும் அது சபையினரின் அங்கீகாரத்தை விழைந்துநிற்கும் நோக்கினை உள்ளடக்கியதென்பதும் தெளிவாகும்.

சங்கம், சங்கப்பலகை; தமிழிலக்கிய அரங்கேற்ற மரபின் தொல்நிலை

தமிழில் இன்று எமக்குக் கிடைக்கும் நூல்களில் தொன்மை வாய்ந்தனவாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பவற்றைச் சங்கநூல்கள் என்பது பொதுவழக்கு. இத்தொடரில் அமையும் சங்கம் என்பது இலக்கிய வெளியீட்டுக் களங்களான அறிஞர்-புலவர் அவையைச் சுட்டிப் பயில்கின்றமை தெளிவு. பண்டைநாளில் - கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் - மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் சங்கம் என்ற பெயரில் 'அறிஞர் - புலவர்' அவைகளை நிறுவி இலக்கிய ஆக்கங்களின் வெளியீட்டுக்குத் துணைநின்றனர் எனவும் புலவர்களை ஆதரித்து வந்தனர். எனவும் வழங்கும் செய்திகள் உள. அந்நாட்களில் மதுரைநகரில் திகழ்ந்த தமிழ்ச்சங்கம் தொடர்பாகவும் அங்கு பொற்றாமரை வாவியில் இருந்த

'சங்கப்பலகை' என்ற 'தகுதிகாண்பீடம்' தொடர்பாகவும் வழங்கும் கதைகள் பல உள. மேற்படி கதைகளின் வரலாற்றுண்மை ஐயத்திற்கிடமானதாயினும் இவற்றின் ஊடாக உய்த்து உணரப்படவேண்டிய உண்மைகள் சிலவும் உள. அக்காலப் பகுதியில் இலக்கிய ஆக்கமொன்றைத் தகுதிகண்டு ஏற்கும் முறைமை தொடர்பாக நிலவியிருக்கக்கூடிய சிந்தனைச் சூழலை இவை உணர்த்திநிற்பன என்பதை மறுப்பதற்கில்லை.

> "சங்கம், 'சங்கப்பலகை' என்பன இலக்கிய ஆக்கத்துக்குச்சமூக அங்கீகாரம் தரும் நிறுவன உருவாக்கத்தை உணர்த்தி நிற்பன. மொழிவளர்ச்சியிலே வாய்மொழி மரபில் மட்டும் இலக்கியம் வாழ்ந்த காலம் முடிந்து எழுத்திலக்கியம் தோற்றம் பெறத் தொடங்கிய போது அவ்வாறு எழுதப்படுபவற்றைத் தரம் நோக்கி ஏற்றுக் கொள்ள(அங்கீகரிக்க) ஒரு நிறுவன நிலை தேவைப்பட்டது. அது சங்கம் ஆயிற்று. அச்சங்கம் தரமதிப்பீட்டுக்கு முன்வைத்த 'அளவுகள்' 'சங்கப்பலகை' என்ற கருத்து நிலையின் தோற்றக் காரணிகளாகும். இவ்வாறு இலக்கியப் படைப்புக்குச் சமூக ஒப்புதல் கோரி நின்ற 'சங்கப்பலகை' என்ற கருத்துநிலையின் செயல் வடிவம் அரங்கேற்றமாகப் பரிணாமம் பெறலாயிற்று. அவையடக்கம், பாயிரம்(சாற்றுகவி) என்பன இலக்கிய உள்ளுறுப்புகளாயின. பிற்காலத்தில் நூல் வெளியீடு, நூல் மதிப்புரை, திறனாய்வு என்பனவாக இது படிநிலை வளர்ச்சி எய்தியது. எனவே நாம் திறனாய்வு என இன்று கொள்ளும் செயற்பாட்டின் மூலக்கூறாகச் சங்கப்பலகை என்ற கருத்து அமைந்தது எனலாம்"

என இக்கட்டுரையாளர் பிறிதொரு சந்தர்ப்பத்திற் தந்துள்ள விளக்கம்[4] இத் தொடர்பிற் கவனத்திற் கொள்ளத்தக்கது.

## தமிழில் இலக்கிய அரங்கேற்றம் தொடர்பான செய்திகள்; கதைகள்

இலக்கிய ஆக்கத்தைக் கற்றோர் அவைமுன் எடுத்துரைத்தமை தொடர்பாக வழங்கிவரும் செய்திகளில் இங்கு முதற் கவனத்திக்கு வருவது சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய பேரிலக்கியங்களின் ஆசிரியர்கள் ஒருவ-

ருக்கு ஒருவர் கேட்போராக அமைந்த நிலை ஆகும்.

"உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்
உரைசால் அடிகள் அருள் மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்."

எனச் சிலப்பதிகாரத்திலும்[5]

"இளங்கோ வேந்தன் அருளிக்கேட்ப
வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் டமிழ்த்திற மணிமே கலைத்துறை
வாறைம் பாட்டினு ளறியவைத் தனனே"

என மணிமேகலையிலும்[6] இச்செய்தி அமைகின்றது. இக்கூற்றுக்களின் வரலாற்று உண்மை ஆய்வுக்குரியது. எனினும் புலமைத் தகுதி உடையோர் ஒருவரை முன் நிறுத்தி அவர் உளங்கொள்ளத்தக்க வகையில் ஒருவர் தம் ஆக்கத்தை வெளிப்படுத்தும் சிந்தனைப் போக்கை இவை உணர்த்துவன என்பது தெளிவு.

ஏறத்தாழ இந்நூல்களுக்குச் சமகாலத்ததாகக் கருதப்படும் இறையனார் அகப்பொருள் என்ற இலக்கண நூலுக்கு எழுதப்பட்ட உரைகள் உருத்திரசன்மன் என்ற ஊமைப் பிள்ளையை முன்நிறுத்தி எடுத்துரைக்கப்பட்டுத் தகுதி காணப்பட்டதாக ஒரு கதை வழங்குகின்றது.[7] நக்கீரர், கபிலர் பரணர் முதலிய பலர் இயற்றிய மேற்படி உரைகளிலே நக்கீரர் உரையே தலைசிறந்ததென அந்த ஊமைப்பிள்ளை தன் மெய்ப்பாடுகளால் உணர்த்தியது என்பது இக்கதை தரும் செய்தி. கண்களில் நீர்வரப் புளகாங்கிதம் கொண்டிருந்த நிலையே தகுதிகாண் அங்கீகாரமாகக் கொள்ளப்பட்டமையை இக்கதை உணர்த்தும். இக்கால இலக்கிய ஆய்வாளர் இதனை 'மனப்பதிவியல்' முறைத் திறனாய்வு எனக் கருதுவர்.

கி.பி. ஆறாம் நூற்றாண்டை அடுத்துத் தமிழிலக்கியம் சமய உள்ளடக்கத்தைப் பெறத் தொடங்கிய சூழலில் சமய நிறுவனங்களான ஆலயங்களும் அவற்றின் சூழலும் இலக்கிய அரங்கேற்றக் களங்களாயின. பக்திப் பாவலர்களான நாயன்மார் ஆழ்வார் ஆகியோர் இறைவன், அடியார், பொதுமக்கள் ஆகியோரை முன்நிறுத்தியும் தம் நெஞ்சை நோக்கியும் தம் உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

சோழப் பெருமன்னர் காலத்திலும் ஆலயச் சூழல் இலக்கிய அரங்கேற்றத்துக்கான முக்கிய களமாகத் திகழ்ந்தது. சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் தில்லைத் திருத்தலத்திலே ஓராண்டுக்காலம் பாடிப் பொருள் விரித்துரைக்கப்பட்டு அரங்கேறியதாக சேக்கிழார் நாயனார் புராணம் கூறுகிறது.[8] கம்பனது இராமாவதாரம் (கம்பராமாயணம்) திருவரங்கம் என்ற தலத்தில் அரங்கேறப்பட்டதென்பது விநோதரசமஞ்சரி தரும் தகவல்.[9] கந்தபுராணம் காஞ்சிக் குமரக் கோட்டத்தில் அரங்கேறியதாக ஒரு தகவல் உளது.[10]

சோழப் பெருமன்னர் காலத்திலும் அதன் பின்னர் தமிழ்நாடு பல சிற்றரசர்களாலும் குறுநிலத் தலைவர்களாலும் ஆளப்பட்ட காலத்தில் ஆலயங்கள் மட்டுமன்றி அரசவைகள், ஆதினங்கள், சிற்றரசு சமஸ்தானங்கள் என்பனவும் அரங்கேற்றக் களங்களாகத் திகழ்ந்தன. சிற்றரச சமஸ்தானம் ஒன்றின் புலவர் சூழாத்தில் தன் புலமையை இளம்பிராயத்திலேயே புலப்படுத்தி அங்கீகாரம் பெற்ற - அரங்கேற்றம் எய்திய - பனாகவே நவயுகக் கவிஞன் மகாகவி சுப்பிரமணியபாரதி நமக்கு அறிமுகமாகிறான்.

மேற்குறித்தவாறான பல்வகை களங்களிலும் இலக்கிய அரங்கேற்றங்கள் நிகழ்ந்த வேளைகளில் படைப்பாளிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் பற்றித் தெரிந்து கொள்வதற்கு இரண்டு அரங்கேற்றச் செய்திகளை இங்கு தனிக் கவனத்திற் கொள்ளவேண்டியுளது. ஒன்று கம்பராமாயணம் அரங்கேற்றப்பட்டமை தொடர்பாக விநோதரசமஞ்சரி தந்துள்ள செய்தி. மற்றது கந்தபுராண அரங்கேற்றம் தொடர்பாக - அதன் 'திகடசக்கர' என்ற காப்புச் செய்யுளின் சொற்புணர்ச்சி தொடர்பாக - வழங்கும் கதை.

கம்பர் தனது இராமாயணத்தை அரங்கேற்ற முற்பட்டவேளை ஸ்ரீரங்கத்திலிருந்த வைஷ்ணவர்கள், தில்லை மூவாயிரவரான தீட்சிதர்கள், திருநறுங்கொண்டை என்ற தலத்தில் இருந்த ஜைன அறிஞர்கள் மாவண்டூர்க் கருமான் முதலிய பலரிடம் அந்நூலுக்கு அங்கீகாரம் பெறவேண்டியிருந்தது என விநோதரசமஞ்சரிக் கதை கூறுகின்றது.[11] மேலும் அவ்விலக்கியத்திற் பயின்ற சொற்களுக்கு வழக்கியல் உண்மை காட்டவேண்டிய நிலை இருந்தமையையும் அக்கதை உணர்த்தும். குறிப்பாக 'குமுதனிட்டகுலவரை' என்ற பாடலில் வரும் 'துமி' என்ற சொல்லுக்கு வழக்கியலுண்மை காட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டதை அக்கதை குறிப்பிடுகின்றது.[12] அதேபோல

கந்தபுராணத்தில் அரங்கேற்றத்தின்போது 'திகடசக்கர' என்ற காப்புச் செய்யுள் முதற்றொடரை திகழ் + தசம் + கரம் என்றவாறு பிரித்துப் பொருள்கொள்ள வேண்டிய நிலையில் 'ழ் + த' என்பது 'ட' என அமைவதற்கு இலக்கண விதி உளதா என்ற வினா அவையில் எழுந்ததாகவும் வீரசோழியம் என்ற இலக்கண நூலில் இதற்கான விதி எடுத்துக் காட்டப்பட்டு ஐயம் தீர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.[18] குறித்த இவ்வகைச் சந்தர்ப்பங்களில் கம்பர், கச்சியப்பர் இருவருக்கும் அவர்களின் இஷ்ட தெய்வங்கள் (சரஸ்வதி, முருகன்) துணை நின்று அரங்கேற்றம் நிறைவு உதவின என்பதை மேற்படிக் கதைகள் உணர்த்துகின்றன.

இவை உண்மை நிகழ்ச்சிகளா என நாம் ஐயுறவேண்டியதில்லை. மேற்படி இலக்கிய ஆக்கங்கள் எழுந்த காலத்திற்குப் பின்னர் அவை பயிலப் பட்டு வந்த சூழலில் உருவான கற்பனைக் கதைகள் இவை எனக் கொள்வதே அறிவுக்குப் பொருந்துவது. ஆயினும் இவ்வாறான கதைகளுக்கு அடிப்படையான 'எண்ணக்கரு' 'சிந்தனைச் சூழல்' என்பன நமது கவனத்திற்கு உரியவாகின்றன. ஒரு படைப்பாளி எவ்வளவுதான் அறிவாற்றல் உள்ளவனாக இருந்தாலும் அவனது படைப்பு எத்தகு சிறப்புடையதாக இருந்தாலும் ~~சபை~~ சபைமுன் வரும்போது சபையினர் அப்படைப்பாளியையும் படைப்பையும் உடனடியாக ஏற்றுக்கொண்டுவிடலாகாது. முழுமையான பரிசீலனையின் பின்னரே சபையினர் அப்படைப்பாளிக்கும் படைப்புக்கும் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்பது இக்கதைகளின் உட்கிடை. இப்பரிசீலனையில் படைப்பின் உள்ளடக்கம், உருவம், உத்திமுறை முதலிய அனைத்துக் கூறுகளும் நுனித்து நோக்கப்பட வேண்டும் என்பது இவ்வகைக் கதைகள் தரும் மற்றொரு குறிப்பு ஆகும். சொல்வழக்கு (துமி) புணர்ச்சிவிதி (திகடசக்கர) என்பன தொடர்பாக எழுந்த வினாக்களை நோக்கும்போது மொழிப்பயிற்சியின் / சமூக மெய்ம்மை மொழிமரபு என்பவற்றில் செலுத்தப்பட்டு நின்ற அதீத கவனம் மொழியை வரையறையுடன் பேணிக்கொள்ளும் நோக்குநிலை - புலனாகின்றது. ஆயினும் த 'ட' வாக மாறுவதற்குப் 'புணரியல் விதி' அவாவி நின்ற சிந்தனைச் சூழல் கச்சியப்பருக்குப் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ' 3:86:10) திகடரும் முகிடரும் ஆகிய தொடர்களில் 'ழ் த' 'ட'வாக மாறிவிட்ட வரலாற்றைக் கவனத்திற் கொள்ளத் தவறிவிட்டமை நமது கவனத்திக்கும் விமரிசனத்துக்கும் உரியதாகிறது. கம்பர் தமது படைப்புக்கு ஸ்ரீரங்கத்து வைணவர்கள், தில்லைத் திருத்தல தீட்சிதர்கள்,

திருநறுங்கொண்டை தலத்துச் ஜைனர்கள், மாவண்டூர்க் கருமான் முதலிய பலரிடம் ஒப்புதல் பெறவேண்டியிருந்ததாக அமையும் கதையானது ஒரு பேரிலக்கியப் படைப்பானது தான் எழுந்த காலத்துச் சமூகத்தின் பல்வேறு சிந்தனைப் பிரிவினரையும் நிறைவு செய்யவல்லதாக அமையவேண்டும் என்ற அறிஞர் சமூகத்தின் உட்கிடையை உணர்த்துவதாகும். கம்பர், கச்சியப்பர் இருவருக்கும் அவர்களது இஷ்ட தெய்வங்களே துணைநின்று அரங்கேற்றத்தை நிறைவு செய்ததாக அமையும் செய்திகள் இறைநம்பிக்கைத் தளத்தின் வெளிப்பாடுகளாகும்.

## அரங்கேற்றம்; இலக்கண மரபு

அரங்கேற்ற முயற்சிக்குக் களமாக அமையும் அரங்கின் இயல்பு, அதில் நூலாசிரியன் பேணிக்கொள்ள வேண்டிய பண்புகள் என்பன தொடர்பாக தமிழர் மத்தியில் நிலவிவந்துள்ள சில மரபுகளைப் பாட்டியல் நூல்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. அரங்கு அல்லது அவை எனப்படுவது பண்பாளர், அறநெறிநிற்போர், நுண்ணறிவுடையோர் கலைவல்லார் ஆகியோரின் சங்கமம் ஆகத் திகழவேண்டும் என்ற கருத்தை கி.பி 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததான வெண்பாப்பாட்டியல் முன்வைத்துள்ளது.

புகழுந் தரும நெறிநின்றோர் பொய்காமம்
இகழும் சினம் செற்றம் இல்லோர் - நிகழ்கலைகள்
எல்லாம் உணர்ந்தோர் இருந்த இடமன்றோ
நல்லாய அவைக்கு நலம்.

நல்லொழுக்கம் செம்மை நடுவுநிலை ஞானம்
குலன்என் றிவையுடையோர் கோதின் - புலனில்லோர்
சென்று மொழிந்தனவும் கேட்போர் செறிந்த இடம்
அன்றோ நிறைந்த திஅவை.[14]

என அந்நூல் பேசுகின்றது. மேற்சுட்டியவற்றுக்கு மறுதலையான நிலையினர் உறையும் அவை தீய அவை எனப்பட்டது. வெண்பாப்பாட்டியலின் மேற்படிக் கருத்தை அங்கீகரிக்கும் வகையிலே கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததான நவநீதப்பாட்டியலும்.

~~அறந்திறம்பர் நல்லறிவோர் அவைத்து நாற்கலையும்~~

அறந்திறம்பர் நல்லறிவோர் அறுபத்து நாற்கலையும்
திறந் தெரிந்தோர் சினம் செற்றம் பொய்காமம் சிதைக்கும் சித்தம்
மறந்து ஒருகாலும் ஒருபாற்படாதவர் மற்றுங் குற்றம்
துறந்தவர் தாங்களும் நல்லவையாம் என்று சொல்லுவரே.[15]

என நல்ல அவையின் இலக்கணத்தைச் சுட்டுகின்றது.

இவ்வாறான நல்ல அவையிலே தன் படைப்பை அரங்கேற்ற வரும் ஆசிரியன் பெருந்திசைகளை அன்றிக் கோணங்களை நோக்கி அமரலாகாது; தான் கூறவந்த பொருளைக் கோபம் இன்றி வெளிப்படுத்த வேண்டும்; விலக்கப்பட்ட வழுச் சொற்களை வழங்கக்கூடாது; முன்னைய நல்ல நூல்களின் ஆணையை மீறக்கூடாது, பொய் பேசலாகாது; இவ்வாறு நடந்துகொள்வதின் தவறினால் அந்த அரங்கேற்றம் தோல்வியிலே முடிந்துவிடும் என்பது நவநீதப் பாட்டியலார் தரும் விளக்கம்.

கோணத்திருப்பினும் கோபம் பெருக்கினும் குற்றமென்று
நாணத்தகுமனை நாவிற் பயிலினும் நாடி நன்னூல்
ஆணைப்படியன்றி அல்லவை சொல்லினும் ஆங்கிருந்தோர்
காணப்பொய் கூறினும் தோல்வியென் றோதுவர் கற்றனரே.[16]

இதிலே 'நன்னூல் ஆணைப்படி' என்ற தொடர் பண்டைய மொழி - இலக்கிய மரபுகளை அடியொற்றிச் செயற்பட் வேண்டுமென்ற வகையில் நிலவிய மரபு பேணும் உணர்ச்சியை உணர்த்தி நிற்பதாகும். கோணத்து இருத்தல் தகாது என்பது சோதிட சாத்திர ரீதியான வரையறையாகலாம். ஏனையவை பண்பாடு, சார்ந்த ~~கட்டுக்கள்~~ நியதிகள் என்பதும் எக்காலத்துக்கும் பொதுவான - ஏற்புடைய கொள்கைக்ள் எனலாம். என்பதும் உய்த்துணரப்படுத்தகின.

மேற்சுட்டியவாறான நல்ல அவையிலே உரியவாறு அரங்கேற்றப்பட்ட ஆக்கம் உரியவகையிற் கௌரவிக்கப்படல் பற்றியும் அதன் ஆசிரியன் சன்மானங்கள் பெறல் பற்றியும் நவநீதப்பாட்டியலிலும் கி.பி 16ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததான பிரபந்தமரபியலிலும் பின்னர் எழுந்த வேறு சில இலக்கண நூல்களிலும் செய்திகள் உள.

செய்யுள் கொளும் இடம் சித்திரத் துகிலின்
அரத்த விதானத்து அலங்கல நாற்றித்
தோரணம் கதலித் துவசம் உயர்த்திப்

பூரண கும்பம் பொன்முனைப் பாலிகை
வெண்பாரித் தீபம் மிளிர்தர அமைத்துப்
பல்லியம் இயம்பப் பாளையர் ஆடப்
பாணரும் மகளிரும் பல்லாண்டிசைதர
அந்தணர் நகைதர வாழ்த்த ஒன்பூ
மலராடை புனைந்து ஒரு தவிசின் மேவி
எதிராய் வேறுமோர் தவிசின் இருந்து
மங்கலப் பாடல் ஏற்றுளம் மகிழப்
பொன்புவி வத்திரம் பூண்பன பிறவும்
உதவி எழடி புலவ னுடன்போய்
மீள்வது கடன் என விளம்பினர் மேலோர்.[17]

என்பது பிரபந்தமரபியல், இதிலே ஒரு மங்கல நிகழ்ச்சிக்குரிய முழுமையான காட்சி கட்புலத்துக்கு முன்வைக்கப்படுகின்றது. வணங்கிய வழிபடற்குரிய பொருளாக-புனிதப் பொருளாக- இலக்கியப்படைப்பு கணிக்கப்படக் காண லாம். ஒரு படைப்பாளிக்கு வாழ்நாளிற் கிடைக்கக்கூடிய அதியுயர் கௌர வத்தை இந்நூற்பா சுட்டுகிறது எனலாம்.

அரங்கேற்றப்படும் நிலையிலான ஒரு கவிதையைப் பெண்ணாக உருவகிக்கும் கற்பனை ஒன்று மேற்படி பிரபந்தமரபியலில் உளது. அரங்கில் உள்ளோர் அப்பெண்ணின் உறவுநிலை சார்ந்தோர் எனப்படுகின்றனர்.

தந்தை புலவன்; தாயவள் தரித்திரம்;
இக்கவிப் பொருளை அணியாய் விரித்து
வசனிக்கக் கேட்போர் மாதவர் ஆகும்;
சந்தப் பொருளைச் சபையினர் உளங்கொளச்
சதிரிற் படிப்போன் தமையனாரும்
பொலிந்த குழுவிற் புகழ்ந்து கொள்வோர்
உறவின் முறையென் றோத லாகும்;
இன்பமுற் றதனை எழிலுடன் கேட்டுப்
பரிசு கொடுப்போர் பர்த்தா ஆமே.[18]

இதன் பொருள் வெளிப்படை. இதில் கவிதைப் பெண்ணின் தாய் தரித்திரம் எனக் கூறப்பட்டுள்ளமையானது தமிழ்க் கவிஞர்களுள் ஒருகாலப் பகுதியினரின்

குறிப்பாக சோழப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிற்பட்ட கால இலக்கியச் சூழல் சார்ந்தோரின் - பொருளியல் நிலையை உய்த்துணர வைப்பதாகும். பரிசு கொடுப்போன் பர்த்தா (கணவன்) எனச் சுட்டப்பட்டமை அக்காலப்பகுதியிற் புரவலர் எய்தியிருந்த பெருநிலையை உணர்த்துவது எனலாம்.

## நிறைவுரை

இவ்வாறாகத் தமிழில் நிலவிவந்துள்ள இலக்கிய அரங்கேற்ற மரபின் ஒரு தற்கால மாற்று வடிவமாகவே 'நூல்வெளியீடு', 'நூல் அறிமுகம்' ஆகிய பெயர்களிலான நிகழ்ச்சிகள் அமைகின்றன. ஆக்கங்கள் ஏட்டில் எழுதப்பட்ட காலப்பகுதியில் அரங்கிலே அவை முழுமையாகப் படிக்கப்பட்டு அங்கீகாரம் பெறவேண்டிய நிலை இருந்தது. பெரியபுராணம் ஒரு ஆண்டுக் காலம் அவையிலே பாடப்பட்டுப் பொருள் விரித்துரைக்கப்பட்டதான வரலாறு[19] இதனை உணர்த்தும். அச்சுவசதி ஏற்பட்டுவிட்ட இன்றைய சூழல் நூல் வெளியீடு என்பது நூல் முழுவதையும் விரித்துரைப்பது என்பதைத் தேவை அற்றதாக்கிவிட்டது. பலரும் அந்நூலைப் படித்தறிய வாய்ப்பிருப்பதால் நூல் பற்றிய சில அறிமுகக் குறிப்புக்களையும் திறனாய்வுக் குறிப்புகளையும் முன்வைப்பதோடு நூல் வெளியீடுகள் நிறைவுபெறுகின்றன. பண்டைய அரங்கேற்ற மரபில் இலக்கிய ஆசிரியனே தன் ஆக்கத்தை விரித்துரைப்பது பெரும்பான்மை. இன்றைய நூல் வெளியீட்டிலே அறிமுகஞ் செய்வோர் திறனாய்வாளர் என்போரின் பங்கே மிகுதி. ஏற்புரை அல்லது பதிலுரை என்ற அளவில் மட்டும் நூலாசிரியனின் பணி நிறைவு பெற்றுவிடுகின்றது.

பொதுவாகப் பண்டைக் காலத்தில் அரங்கிற்குக் கூறப்பட்ட இலக்கணம், நூலாசிரியன் பேணிக்கொள்ள வேண்டியனவாகச் சுட்டப்பட்ட பண்புகள் என்பன இன்றைய காலப் பகுதிக்கும் பெரிதும் பொருத்தமுடையனவாகவே கொள்ளற்பாலன. பண்டு இலக்கியத்தை ஏற்றுப் பரிசில் வழங்கிய புரவலர்களின் நிலையில் இன்று முதற்பிரதி, சிறப்புப் பிரதி என்பன பெறுவோர் திகழ்கின்றனர்.

இலக்கிய அரங்கேற்றமானது நூல் வெளியீடாகப் பரிணாமம் பெற்றுவிட்ட இன்றைய நிலையிலும் இலக்கியத்துறைகளின் பலவற்றில் அரங்கு என்ற சொற் பயிற்சி தொடர்ந்து நிலவுவதை அவதனிக்கலாம். கவியரங்கு, கருத்தரங்கு, உரையரங்கு முதலியன இவ்வகையிற் சுட்டித்தக்கன. இவற்றிலே முதன்முதலில் பங்குகொள்வோருக்கு இவை 'அரங்கேற்றங்' களாகவே அமைகின்றன.

→ இன்னும் சான்றுகளும்.

குறிப்புக்களும் சான்றுகளும்


01. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, பகுதி - 1, பதி, இ.மா. கோபால கிருஷ்ணக்கோன், மதுரை எக்ஸெல்சியர்ா பவர் பிரஸ், மதுரை; 1956. பக் 123.

02. மேற்படி

03. Tamil Lexican. Published under The Authority of the University of Madras, Madras, 1931. p.116.

04. சுப்பிரமணியன்.நா. "தமிழில் இலக்கியத்திறனாய்வு மூலங்கள் - ஒரு மதிப்பீடு", நாவாவின் ஆராய்ச்சி, காலாண்டு ஆய்விதழ், இல 41, (அக்டோபர் - 1991), சி.சொக்கலிங்கம், 252 செட்டித்தெரு, நாகர் கோவில், 1991. பக் 175 .

05. சிலப்பதிகாரம்: பதிகம், வரிகள் 87-89.

06. மணிமேகலை : பதிகம் வரிகள் 95-98

07. களவியல் என்ற இறையனார் அகப்பொருள் உரையுடன், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட். திருநெல்வேலி மறுபிரசுரம் 1964, பக் 5-8.

08. உமாபதி சிவாசாரியார், சேக்கிழார் நாயனார் புராணம், ஸ்ரீஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் உரை, யாழ்ப்பாணம் தமிழ் நூல்கள் பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம், 1967, பாடல் 79, பக் 68

09. வீராசாமிச் செட்டியார், அஷ்டாவதானம், விநோதரசமஞ்சரி 2ம் பதிப்பு, பதி, மே.வி.வேணுகோபாலபிள்ளை,, பிரிமியர் ஆட்ஸ் பிரஸ், புரசைப்பாக்கம், 1953. "கம்பராமாயணம் பாடி அரங்கேற்றியது" - பக் 166 - 246.

10. கச்சியப்ப சிவாசாரியார், கந்தபுராணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பரிசோதித்தது (8ம் பதி) வித்தியானுபாலன யந்திரசாலை சென்னை, 1952, கச்சியப்ப சுவாமிகள் சரித்திரச் சுருக்கம். பக் 14-15.

11. விநோதரசமஞ்சரி, மு.நூ. மேற்படி தலைப்பில் அமைந்த கதைப்பகுதி தரும் தகவல்.

12. மேற்படி, பக் 166-168

13. கந்தபுராணம், மேற்படி

14. இலக்கணத்_தொகை_யாப்பு_-_பாட்டியல் - தொகுப்பு நூல் தொகுப்பு : டாக்கர் ச.வே.சுப்பிரமணியன் தமிழ்ப்பதிப்பகம், சென்னை, 1978, பக் 509 வெண்பாப்பாட்டியல் : பொது மொழியியல் வெண்பாக்கள் 9 - 10.

15. நவநீதப்பாட்டியல், பொது மொழியியல்; செய்யுள் : 20 பதி: எஸ்.கலியாணசுந்தர ஐயர், ச.கு. கணபதி ஐயர், 2ம் பதிப்பு, மகாமகோபாத்யாய டாக்டர்.உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம் அடையாறு, சென்னை 1961. பக் 79.

16. மேற்படி: செய்யுள் 27, பக் 85

17. இலக்கணத்தொகை_யாப்பு-பாட்டியல், மு.நா. தொகை நூல் பக் 520, பிரபந்த மரபியல். நூற்பா : 31

18. மேற்படி: பக். 505. பிரபந்த மரபியல் நூற்பா: 33

19. பார்க்க: குறிப்புக்களும் சான்றுகளும் எண்: 8

ததததததத